# சாட்சியின் வாக்குமூலம்

## திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்

**அசல் வழக்கு எண் : 150/2014**
**DW1– திரு. பாலசுப்பிரமணியம் த/பெ. சந்திரசேகர்**
**16.04.2026**

சாட்சி சத்திரப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்.

**நேரம் 12.45 மணி**

வாதி என்ன வழக்கு தொடுத்துள்ளார் என்று தெரியுமா என்றால் என்னுடைய சொத்தில் பாகப்பிரிவினை கோரி என்னுடைய சகோதரர்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். 2 ஆம் வாதி சிவராமன் என்னுடைய தம்பி. 3 ஆம் வாதி காலஞ்சென்ற என்னுடைய அண்ணன் ஞானசேகரனின் மனைவி ஆவார். 4 ஆம் வாதி ரஞ்சன் காலஞ்சென்ற என்னுடைய அண்ணன் ஞானசேகரனின் மகன் ஆவார். 5 ஆம் வாதி ரஞ்சிதா காலஞ்சென்ற என்னுடைய அண்ணன் ஞானசேகரனின் மகள் ஆவார். என் தந்தை எப்போது இறந்தார் என்றால் 2003 ஆம் வருடம் இறந்தார். அவர் HVF ஆவடியில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். என் தாயார் பணிபுரியவில்லை. வழக்கின் தாவா சொத்துக்கள் எங்குள்ளது விவரம் தெரியுமா என்றால் தெரியும். தாவா சொத்துக்கள் என் தந்தை சம்பாதித்து கிரையம் பெற்றது என்றால் சரியல்ல. என் அம்மா சம்பாதித்து வாங்கிய சொத்தாகும். தாவா சொத்து எந்த வருடம் வாங்கப்பட்டது என்றால் 1988 ஆம் வருடம் வாங்கப்பட்டது. எந்த வருடம் தாவா சொத்து என் பெயரில் எழுதப்பட்டது என்றால் 1995 ஆம் வருடம் எழுதப்பட்டது. நான் எங்கு வேலை செய்து வந்தேன் என்றால் Indian Air Force ல் 1984 முதல் பணிபுரிந்து 2004 ல் பணி ஓய்வு பெற்றுவிட்டேன். தாவா சொத்தில் நான், வாதி அனைவரும் ஒன்றாக வசித்து வந்தோம் என்றால் சரியல்ல. நான் வேப்பம்பட்டில் தாவா சொத்தில் வசித்து வந்தேன்.

**நேரம் 12.52 மணி**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிகாக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.